**செப்டம்பர் - 14**

**"புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விநோதமாய்ப் பேசும் விஷயத்தில் அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஏனெனில், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனசாட்சியினிமித்தம், ஒருவன் அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவங்களை பொறுமையாய் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும்." -1பேது 2 : 12, 19**

நம்மைப்பற்றி துர்ச்செய்தி பரப்பப்படலாம். நம்மேல் வீண்பழி சுமத்தப்படலாம். ஆனால் நம்மை அறிந்திருக்கிற நம்மோடு விவகாரம் வைத்துக்கொண்டிருக்கிற எல்லோரும்,தத்துவங்களுக்கு (அடிப்படையான உண்மைக்கு) நமக்கிருக்கிற உண்மைப் பற்றையும், ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் சதாகாலமும் உரித்தாயிருக்கிற தேவன் கிறிஸ்துவின் மூலமாய் மகிமைப்படத்தக்கதாகவும், அவருடைய நாமத்துக்கும் விவகாரத்துக்கும் கனத்தை உண்டாக்குகிறதாய் இருக்கத்தக்கதாகவும், நமது வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் ஜீவியத்தின் நடத்தையும் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கவும், நாம் எடுக்கும் முயற்சியும், அனுபவத்தின் மூலமாக அவர்கள் கண்டுகொள்ள வேண்டும். **- Z ’03, 365 (R 3246)**

கர்த்தருடைய ஜனங்கள் அடிக்கடி அநியாயமாய் அவதூறுக்குள்ளாகுகிறார்கள். நிந்தைக்கு தகுந்தவர்களாய் இராதபடி ஜீவிப்பது அவர்களுடைய நிலையான பொறுப்பாய் இருக்க வேண்டும். ஆனபோதிலும் அவதூறு ஏற்பட்டாலும், நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருப்பார்களாக. நேர்மையான நடத்தையின் ஓட்டத்தில் தொடர்ந்து ஓடுவார்களாக. அவர்கள் இப்பொழுது மற்றவர்களைத் தங்களுடைய நற்கிரியைகளினாலே ஆசிர்வதிக்க முடியாமற்போனாலும், ஆசிர்வாதத்தைப் பெற தவறிப்போனவர்கள் கிறிஸ்துவின் நாளில் இரட்சிப்பின் சந்தர்ப்பத்தினால் சந்திக்கப்படும்போது இவைகள் அவர்களுடைய ஞாபகத்துக்கு வரும். அந்த நற்கிரியைகளின் நினைவு தேவனுக்கு மகிமையாக அவர்கள் ஆசிர்வாதத்தைப் பெற பயிற்சி அளிக்கும் என்பது நிச்சயம். விதை முளைக்க நெடு நாட்கள் தாமதித்தாலும் பிறகு ஏராளமான விளைச்சலைக் கொடுக்கும். ஆகையால் நம்முடைய நற்கிரியைகளுக்காக தீமையை அனுபவிக்கும் சிலாக்கியத்துக்காக தேவனுக்கு நன்றி செலுத்தலாம். **- P ’33, 147.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**2கொரி 8:21; ரோம 12:17; பிலி 4:8; நெகே 5:9; 1பேது 2:15; 3:13-18; மத் 5:16; யோவா 13:34,35; 1பேது 2:20-24; ரோம 8:17-19; 2தீமோ 2:10-12; எபி 13:10-14.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 323 (R 5116).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் தவறாய் நடத்தப்பட்டேனா? அதை நான் எவ்வாறு சகித்தேன்? பலன்கள் என்ன?**